செ.வெ.எண்: 79 நாள்:01.11.2021

**பத்திரிக்கை செய்தி**

2021-2022 ஆம் நிதியாண்டிற்க்கான மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியருக்கான கல்வி உதவித்தொகை மற்றும் வாசிப்பாளர் உதவி தொகை வழங்கிட தகுதியான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியருக்கான ஓர் ஆண்டுக்கு கல்வி உதவித்தொகை கீழ்காணும் விபரப்படி வழங்கப்படுகிறது அ) 1-5 வகுப்பு வரை ரூ.1000/-மும் ஆ) 6-8 வகுப்பு வரை ரூ.3000/-இ) 9-12ம் வகுப்பு வரை ரூ.4000/-) ஈ) இளங்கலை பட்டப்படிப்பிற்கு ரூ.6000/- உ) முதுகலை பட்டப்படிப்பு, தொழிற்கல்வி,தொழல்நுட்ப கல்வி, மருத்துவம் மற்றும் பொறியியல் தொழிற்கல்விக்கு ரூ.7000/-) ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

மேலும் பார்வையற்றோருக்கு வாசிப்பாளர் உதவித்தொகையாக அ) 9ம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை ரூ.3000/- (ஆண்டொன்றுக்கு) ஆ) இளங்கலை பட்டப்படிப்பிற்கு ரூ.5000/-(ஆண்டொன்றுக்கு) இ) முதுகலைப் பட்ட வகுப்பு மற்றும் தொழில் படிப்புகள் ரூ.6000/-(ஆண்டொன்றுக்கு) வழங்கப்படுகிறது.

2021-2022 ஆம் நிதியாண்டு திட்டத்தின் கீழ் பயனடைய அரசுப்பள்ளிகள்/ கல்லூரிகள்/அரசு உதவி பெறும் கல்லூரிகள்/தொலைதூரக்கல்வி/பயிற்சி நிறுவனங்களில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ/மாணவியர் முந்தைய கல்வி ஆண்டு இறுதித்தேர்வில் குறைந்தபட்சமாக 40 சதவிகிதம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். மாணவர் பிற துறைகளில் கல்வி உதவித்தொகை ஏதும் பெறவில்லை என்று தலைமையாசிரியர்/கல்லூரி முதல்வரால் சான்றிதழ் அளிக்கப்பட்ட வேண்டும்.

2021-2022 ஆம் நிதியாண்டிற்கு இம்மாவட்டத்தில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ/மாணவியர்கள் கல்வி உதவித் தொகை மற்றும் வாசிப்பாளர் உதவி தொகை பெற உரிய விண்ணப்பத்தினை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் பெறலாம் அல்லது Nagapattinam.nic.in என்ற இணையதள முகவரியிலும் பதிவிறக்கம் செய்து 31.12.2021க்குள் விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துகொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**